# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2012 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2012.05.21 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

**மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

முன்னுரை.

"மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம்" என அறிமுகப்படுத்தப் படுகின்ற வைத்திய நிறுவனம் (இது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரசித்தி பெற்றிருக்கின்ற வைத்தியர்களை உள்ளடக்கியிருக்கின்றது.) அந்நிறுவனத்தின் நோக்கினை சிறந்த முறையில் நிறைவேற்றிக்கொள்வது மற்றும் அந்த மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனத்தோடு சம்பந்தப்பட்ட சகல விடயங்கள் சம்பந்தமாக அந்நிறுவனத்தின் உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க செயற்படுவதற்கு ஏற்கனவே நிறுவப்பட்டிருப்பதாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட ஆரம்பமாகும் தினத்திலிருந்து மற்றும் (இதன் பின்னர் இது அனைத்திலும் "நிறுவனம்" என குறிப்பிடப்படும்) மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனத்தின் யாப்பிற்கிணங்க வாக்களிப்பதனால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களது பதிலீட்டாளர்கள் மற்றும் இதனால் நிறுவப்பட்டு ("கூட்டுத்தாபனம்' என குறிப்பிடப்படுகின்ற) மெடிசினா ஓல்டனேடிவா எனும் பெயரில் உறுதியான நிலைப்பாட்டினை யுடைய கூட்டுத்தாபனமாக இருக்கவேண்டும் என்பதோடு அப்பெயரினால் அக்கூட்டுத்தாபனத்தினால், அதற்கு எதிராக சகல நீதி மன்றங்களிலும் வழக்குத் தொடர முடியுமானதோடு, பொது இலச்சினையை பாவிப்பதும் சுய விருப்பத்திற்கேற்ப அதனை மாற்றுவதற்கான பூரண அதிகாரமும், சக்தியும் அக்கூட்டுத்தாபனத்திற்கு காணப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்தின் பொது நோக்கு.

**3.** கூட்டுத்தாபனம் நிறுவப்படுவது ஏதேனும் பொது நோக்கத்திற்காக எனின், அதன் நோக்கம் என்ன என்பதை இதன்கீழ் குறிப்பிடப்படல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) வகுப்புக்குரிய வைத்தியத்துறையை உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் பிரபலப்படுத்தல் மற்றும் இலவசமாக கல்வி வழங்கல் ;

(ஆ) வறுமை மற்றும் அடைக்கலம் பெறவேண்டிய நோயாளர்களுக்கு வகுப்புக்குரிய வைத்திய முறைகள் மூலம் இலவசமாக சிகிச்சையளித்தல் ;

(இ) வறுமைக்குட்பட்ட பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையை உயர்த்துவதற்கான வசதிகளை வழங்கல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் இலக்கினை அடைந்து கொள்வதற்காக உள்நாட்டு வைத்திய அமைச்சு ஆயர்வேத திணைக்களம் மற்றும் வேறு அரச மற்றும் நிறுவனங்களுடன் நட்புடன் செயற்படல் ;

(உ) சமூக, பொருளாதார மற்றும் கல்வி கலாசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்ற வேறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் நட்புடன் செயற்படல்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் இலக்கினை விருத்தி செய்து கொள்வதற்கான அச்சிடப்பட்ட மற்றும் ஏனைய ஊடக நடவடிக்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ;

(எ) தேசிய மற்றும் சர்வதேச மாணவர்களுக்கு வகுப்புக்குரிய வைத்திய முறையை வைத்தியத்துறையில் வழங்குவதற்கும் அதற்கான விடயதானங்களை கற்க இலவசமாக வசதிகளைச் செய்துகொடுத்தல் மற்றும் புலமைப் பரிசிலுக்கு முன்னுரிமை வழங்கல் ;

(ஏ) தேசிய மற்றும் சர்வதேச கல்வி நிறுவனங்களுடன் இணைந்து கல்வி வளர்ச்சியை பகிர்ந்து கொள்வதற்கான முயற்சிகளை முன்னெடுப்பது மற்றும் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்வது. அதனூடாக விருப்பத்திற்கான வைத்தியத்துறையிலும் மற்றும் கல்வித் துறைகளிலும் திறமைச் சித்தி பெற்றுக்கொள்வது ;

(ஐ) வகுப்புக்குரிய வைத்தியத்துறையில் மற்றும் கல்வித் துறைகளிலும் தேசிய, சர்வதேச மாணவர்களுக்கு ஆராய்ச்சி செய்வதற்கும் விரிவுபடுத்துவதற்கும் வழிவகைகள் செய்து கொடுத்தல் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் சகல நோக்குகளையும் அல்லது அதிலேதேனும் அடைந்து கொள்வதற்கு மனமொத்த அல்லது உடன்பாடான வேறேதேனும் செயற்பாடுகள் மற்றும் ஏனையவற்றை செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தின் மற்றும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நடைமுறைகளுக்கிணங்க வங்கிக்கணக்குகளை ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தல் முதல் பிணையுடன் அல்லது இல்லாமல் பணம் கடன் வாங்கல் அல்லது கொள்ளல், தேசிய அல்லது உள்நாட்டு மூலங்களில் ஏதான அன்பளிப்புகள் மற்றும் நன்கொடைகளைப் பொறுப்பேற்றல் மற்றும் சேகரித்தல், கூட்டுத்தாபன நிதிகளை முதலீடு செய்தல், சொத்துக்களை கைப்பற்றுதல் மற்றும் கொள்வனவு செய்தல், கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ள அல்லது கூட்டுத்தாபனத்தினால் கைப்பற்றப்பட்டுள்ள அல்லது கூட்டுத்தாபனத்தால் வகிக்கப்படுகின்ற ஏதேனும் இடத்தில் கட்டிடங்கள் ஏதேனும் நிர்மாணித்தல், கூட்டுத்தாபனத்தின் நோக்கினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான உத்தியோகத்தர்கள் மற்றும் சேவகர்களை கடமையில் ஈடுபடுத்தல், சேவையிலிருந்து நீக்குவதற்கான அதிகாரம் உட்பட கூட்டுத்தாபனத்தின் நோக்கினை நிறைவேற்றிக்கொள்வதற்கு அல்லது அடைந்து கொள்வதற்குத் தேவையான அல்லது மனதொத்த அல்லது உசிதமான ஏதேனும் சகல நடவடிக்கைகள், செயற்பாடுகள் மற்றும் சகலவற்றையும் செய்யும் நடைமுறைப்படுத்தும் அதிகாரம் கூட்டுத்தாபனத்திற்குக் காணப்படுகிறது.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் நிகழ்காலத்தில் அமுலில் இருக்கின்ற விதிகளின்கீழ் அதன் நடவடிக்கைகளின் முகாமைத்துவம் அவ்வழிகளில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் மற்றும் அதற்கிணங்க தெரிவு செய்யப்பட்டுள்ள நிறைவேற்று சபையினால் செயற்படுத்தப்படும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை முகாமைத்துவப் படுத்தல் அதன் இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவையான இச்சட்டம் போன்று வேறு ஏதேனும் எழுத்தினாலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மாற்றமாகாத ஏதேனும் பிரமாணங்கள் அவ்வப்பொழுது நடைபெறும் பொதுக்கூட்டங்களுக்கு வருகை தந்துள்ள உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக்கு குறையாத வாக்கினால் அங்கீகரித்துக்கொள்ளல் சட்டப்படி தவறாகும். அவ்வாறான பிரமாணங்கள் அம்முறையிலேயே கூட்டத்தில் மாற்றுதல், புதுப்பித்தல் நியமித்தல் அல்லது அதற்கு புதிதாக ஏதேனும் சேர்த்தலும் செய்யமுடியும்.

(3) முதல் நிறைவேற்றுச் சபை இந்நிறுவனம் கூட்டிணைக்கப் படுகின்ற தினத்திற்கு முன்னரான தினத்தில் பதவி வகிக்கின்ற உறுப்பினர்களை உள்ளடக்கியிருக்கும்.

(4) இச்சட்டமானது நடைமுறைப்படுத்தல் ஆரம்பமாகின்ற தினத்திற்கு முன்னரான தினத்தில் நிறுவனத்தில் அமுலில் இருந்த விதிகள் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான சட்டங்களுக்கு முரண்படாத வரை இச்சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்பட வேண்டும்.

(5) கூட்டுத்தாபனத்தின் சகல உறுப்பினர்களும் தற்பொழுது அமுலில் இருக்கும் சட்டங்களுக்குக்கீழ்ப்படிய வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் மற்றும் பற்றுக்கள்.

**6.** (1) இச்சட்டமானது நடைமுறைப்படுத்தி தரப்படும் திகதிக்கு முன்னர் நிறுவனத்தினது கடன் மற்றும் பற்றுக்கள் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுவதோடு நிறவனத்திற்கு வேண்டிய சகல சட்டங்களும் மற்றும் உறுப்பினர் தொகை மற்றும் உதவு தொகை சட்டத்தின் செயற்பாடுகளுக்கிணங்க கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டும்.

(2) உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய நிரந்தர உறுப்பினர் தொகை வருடாந்த உறுப்பினர் தொகைக்கு மேலாக என்பது பணத்தொகைகளையும் கூட்டுத்தாபன கடன்பதிலும் பற்றுக்களை விடுவிப்பதற்காக செலுத்துவதற்கு எவ்வுறுப்பினரும் கட்டுப்பட்டவரல்ல.

*கூட்டுத்தாபனம் அசையும் அசையா சொத்துக்களை வைத்திருக்க லாம் என்பது.*

**7**. ஏதேனும் கொள்வனவுகள் மூலம், கொடையின் மூலம் பூர்வீக சொத்தின் மூலம், அல்லது வேறு முறையில் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான ஏதேனும் அசையும் அசையாத ஆதனங்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு உட்பட பொறுப்பேற்பதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியாக அதிகாரமும் இறைமையும் காணப்படுகிறது. மேலும் அவ்வா றான சகல சொத்துக்களும் இச்சட்டத்தின் நடவடிக்கைகளுக்காக, கூட்டுத்தாபனத்தில் நடைமுறையிலிருக்கும் நடைமுறைகளுக்கும் விதிகளுக்குமிணங்க அடகு வைக்கும், விற்கும், குத்தகைக்கு வழங்கும் அல்லது வேறு விதத்தில் வெளியாகிடும் பூரண அதிகாரம் கூட்டுத்தாபனத்திற்கு உரியதாகும்.

*கூட்டுத்தாப னத்தின் நிதியம்.*

**8**. (1) கூட்டுத்தாபனத்திற்கு அதனது விதியுமொன்று காணப்பட வேண்டுமென்பதோடு கூட்டுத்தாபனம் சம்பந்தமாக அல்லது கூட்டுத்தாபனத்திற்கு இதுவரை கிடைத்துள்ள அல்லது இதற்குப் பின் கிடைக்கின்ற பரிசுகள், இறுதி விருப்பாவண கொடுப்பனவு வழங்குதல், நன்கொடை, அழைப்பாளர் தொகை, உதவுதொகை, கட்டணம் அல்லது வழங்கல் கூட்டுத்தாபனத்தி னால் தீர்மானிக்கப்படுகின்ற பிரகாரம் ஒரு வங்கியில் அல்லது பல வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்பட வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் சுய அதிகாரம் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதிலும் செயற்படுத்து வதிலும் கூட்டுத்தாபனத்தினால் செய்யப்படுகின்ற செலவினங் களை செய்வதற்கான பணம் இந்நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**9**. (1) கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்த அல்லது கூட்டுத்தாப னத்தினால் செலவழிக்கப்பட்ட சகல பணம் பற்றிய கூட்டுத்தாப னத்தில் உரிய முறையில் கணக்கிடுவதற்கு ஏற்படுத்த வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட கணக்காய்வாளர் ஒருவர் அல்லது கணக்காய்வாளர்களினால் ஒவ்வொரு வருடத்திலும் ஒரு தடவையேனும் கூட்டுத்தாபனத்தில் பரிசோதித்து கணக்காய்வு செய்யப்பட வேண்டும் என்பதோடு வருமானத்திலும் செலவுக்கணக்கில் மற்றும் கூட்டுத்தாபனத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்த வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**10**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, கூட்டுத்தாபன செயலாளர் பொறுப்பில் இருக்கவேண்டும் என்பதோடு கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் செயலாளர் அல்லது கூட்டுத்தாபனத்தில் உரியமுறையில் அதிகாரம் வழங்கப்பட்ட வேறு நபர்கள் இல்லாமல் எவ்விதத்திலும் இடப்படகூடாது. அந்நபர்கள் தாம் வந்திருப்பதற்கான அடையாளமாக அப்பத்திரத்தில் தமது கையொப்பமிட வேண்டும். அக்கையொப்பத்தின் சாட்சிகளாக யாரேனும் நபரால் இடப்பட்ட கையொப்பத்திற்கு வேறுபட்டதாக அமைய வேண்டும்.

*குடியரசினதும் அந்நியர்களதும் உரிமைகளை பாதுகாத்தல்.*

**11**. இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் அவர்கள் மூலமாக அல்லது அவர்களுக்குக்கீழ் உரிமை கோருகின்ற வேறு நபர்கள் தவிர இலங்கை குடியரசின் அலலது வேறு அரச சபையின் அல்லது கூட்டுத்தாபனத்தின் அல்லது வேறு நபர்களது உரிமைகளுக்கு இச்சட்டத்தின் உள்ளான எதனாலும் அழிவோ அல்லது அச்சுறுத்தலோ ஏற்படக்கூடாது.

*கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்ட தன் பின்னால் எஞ்சியுள்ள ஆதனம்.*

**12**. கூட்டுத்தாபனத்தைக் கலைக்கும்போது கூட்டுத்தாபனத்தின் சகல கடன்களும் மற்றும் பற்றுக்களும் செலுத்தப்பட்ட தன்பின்னர் ஏதேனும் சொத்துக்கள் எஞ்சினால் அச்சொத்துக் களை கூட்டுத்தாபனத்தின் நோக்கிற்கு ஒத்த நோக்குடைய சுய வருமானம் அல்லது சொத்தில் ஏதேனும் தமது உறுப்பினர்களுக்கிடையில் பகிர்ந்து கொடுத்தல் விதிகளால் தடை செய்யப்பட்டுள்ள வேறு ஏதேனும் ஒரு சொத்திலிருந்து அல்லது சங்கத்திற்கு அச்சொத்துக்களை வழங்கல் அல்லது உரித்தாக்கல் செய்யப்பட வேண்டும். அச்சங்கம் அல்லது சங்கங்கள் எதுவென கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் கூட்டுத்தாபனம் கலைக் கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அதற்கு முன்னர் தீர்மானிக் கப்பட வேண்டும்.

***13.*** *இச்சட்டத்தின் சிங்களை, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்